உ

கடவுள் துணை.

பதினெண் சித்தர்களில்

மகாமருந்துவம் பொருந்திய

தேரையர்

வயித்தியம்-௩௱.

டி. சாரதா புத்தகசாலை அதிபர்

த. துரைசாமி முதலியார்

அவர்களால்

புவனேஸ்வரி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

விலை] **1925** [அணா 12.

கெ. 23, பாளையப்பன் தெருவு, மின்ட் போஸ்ட், மதருஸ்.

S.193

உ

கடவுள் துணை.

பதினெண்சித்தர்களில்
மகாமருத்துவம்பொருந்திய

தேரையர்வயித்தியம்

ருா.

இவை.

மதுரை-புதுவை-சென்னை இச்சங்கங்களில்
தமிழ்த் தலைமைப் புலமை நடாத்திய
களத்தூர்
வேதகிரிமுதலியார்-குமாரர்

ஆறுமுகமுதலியார்

ஆயுள்வேதபாஸ்கரன்

கந்தசாமிமுதலியார்

இவ்விருவர்களால்
பற்பலஏட்டுப் பிரதிகளைக்கொண்டாராய்ச்சி செய்த
பிரதிக்கிணங்கச்

த. துரைசாமி முதலியார்

அவர்களால்

புவனேஸ்வரி அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.
1926.

பதினென்சித்தர்களில் மஹா மகத்துவம் பொருந்திய

போக மஹா முனிவர் அருளிய

போகர் சப்தகாண்டம் 7000 பாடல்.

மஹா மகிமைவாய்ந்த சித்தர்களுள் நாற்பத்தெண்முனிவர்களும் நவகோடி ரிஷிகளும் ஜீவர்களின்பேரில் உள்ள காருண்யத்தால 21-இலட்சம கிரந்தங்கள் செய்தருளினர் ஒவ்வொருகிரந்தத்திலும் அநேக மகத்துவங்கள் நிறைந்தது போகர் சப்தகாண்டமாகிய இந்நூலில் அநுபவவைத்தியமுறைகளும் வாத முறைகளும், சரக்குகளின் கட்டுகள், கற்பங்களின் முறை உப்புவகைகளின் கட்டு வேதைகளும் பாஷாண வகைகளும் போகர்தமது சமாதிகளில் விளக்கிய இவைகளை விரிவாக எழுதுவதற்கு இடம்தாராமையால் இத்துடன் நிறுத்துகின்றனம். இதன் விபரமும் புஸ்தகத்தின் விஷய அட்டவணையில் விபரமாய் காண்க.

இதன் விலை ரூபாய் 4 0 0 ஷை கிளேஸ் கடிதம் 6 0 0

அமுதகலைக்யானம்	1	0	மணிமந்திரவைத்தியசேகம்	1	0
அகஸ்தியர் வயித்தியகாவியம்	1	0	மூலிகைஜாலரத்னம்2-பாகம்	0	8
அனுபவவைத்யதேவரகஸ்ய	5	0	மெடேரியா மெடிகா	3	0
ஷை கிளேஸ்	7	0	யாக்கோப் வயித்தியசிந்தாமணி	1	8
அகஸ்தியர் செந்தூரம்-300	0	8	ஷை பஞ்சபூத சரக்குகளின்		
ஆத்மரக்ஷாமிருதமென்னும்			பஞ்சாமித்திரம்	0	12
வைத்தியசாரசங்கிரகம்	2	0	வைத்ய திறவுகோல்	0	12
இராஜவைத்தியபோதினி	0	12	வைத்யரத்னச்சுருக்கம்	0	4
இராமதேவர் சிவயோகம்-200	0	6	வைத்யமூலிகையகராதி	1	4
உரோமரிஷிவயித்தியம் 500	0	10	ஷை கிளேஸ்	1	0
ஊர்வசிரசவாதசிடகா	0	4	வைத்தியராஜசிந்தாமணி	1	8
கருவூரார் நொண்டிவாதகாவியம்	1	8	வைத்ய அரிச்சுவடி	0	0
கைமுறைபாக்கெட்வயித்யம்	1	0	ஷை 2-ம்பாகம்	0	4
கொங்கண கடைக்காண்டம் 500	0	8	ஞானவெட்டி	1	0
ஷை மாட்டுவாகடம்தனி	0	12	ஷை உரையுடன்	2	8
ஷை அஸ்வசாஸ்திரம்தனி	0	12	தக்ஷிணாமூர்த்தி திருமந்திரம்		
ஷை சக்கிரத்துடன் 2-ம்சேர்ந்தது	1	4	1500-பாடல்	1	8
சிகிச்சாரத்னதீபம்	2	0	நவரத்னவைத்தியசிந்தாமணி	1	4
ஷை 2பாகம்கண்ணுசாமிய	1	8	பரிபூரணம்-400	0	4
சிரோரத்னவைத்யபூஷணம்	1	4	பச்சிலைவர்க்கமூலிகை யகராதி	0	12
18 சித்தர் நாடிசாஸ்திரம்	1	0	பதார்த்தகுணசிந்தாமணி	1	4
18 சித்தர்சில்லரைக்கோர்வை	1	8	போகர்-7000-ம்	4	0
சுப்பிரமணியபண்டிதர் ஜீவர			ஷை கிளேஸ்	6	0
க்ஷாமிருதம்	7	0	ஷை 700-பாடல்	0	10
செய்முறைபாக்கெட் வைத்தியம்	1	0	ஷை ஜெனனசாகரம்	0	10
அகஸ்தியவல்லாதி 600	0	10	சிரோத்தினநடன காண்டம்	1	0
அகஸ்தியர் ஆயுள்வேதம்			அகஸ்தியர் ஜாலம்	0	2
1200-பாடல்	1	0	பாலவாகடதிரட்டு	1	0
தன்மந்திரி தயிலம்-500	0	8	போகர் நிகண்டு 1200-பாடல்	1	8
தன்மந்திரிநிகண்டு	0	8	போகர் இரண்டாவது பாகம்		
தேரையார் 1001-பாடல்	0	12	கருக்கடைநிகண்டு	0	10
தேரய்யர் 500-பாடல்	0	8	போகர் சாக்குவைப்பு 800-பாடல்	0	14

த. துரைசாமிமுதலியார்

நெ. 23, பாளையப்பன் தெருவு, மின்ட், போஸ்டு, மதருஸ்.

தேரையர்சரித்திரம்.

——-(*)-——

தெய்வீகத்தன்மை பொருந்திய அகஸ்திய முனிவர் தன்னருள்
ஞானோபதேசங்களைத் தனக்குத் தக்கசீஷ னொருவனுக்குப்போதிக்க
வேண்டுமென்றுகருதியிருந்ததால் அவர்மற்றவொரு நாளில் அக்க
ருதியை நினைந்து ஊமைப்பிள்ளையா யிருந்தால் மெத்தநல மென்றெ
ண்ணிபொதிகையைவிட்டிறங்கி ஊருக்குப்பிரவேச மானார் அப்போது
அருள்தங்கிய ஔவையென்பவள் இவர்வருஞ்செய்தியறிந்து முற்பி
றப்பில் இராமதேவரென்றும், யாக்கோபரென்றும் பெயர்தங்கிய இரு
வரையும் அழைத்து அப்பாமைந்தர்களே அகஸ்தியமகா முவர்தன்
னுடையஞானோபதேசங்களை ஓர் நற்சீஷனுக்கு போதிக்கவேண்டுமெ
ன்று நினைத்துவருகின்றார் ஆனதால் அவரிஷ்டப்படி முடிக்கவுபாயத
ந்திரங்கள்கூறுகிறேன் அதேதெனனில் அவர்ஊமைப்பிள்ளைவேண்
டுமென்றுவிரும்புதலால் உங்க ளிருவரில் மூத்தவனாகிய இராமதேவ
னென்பவனே உன்னையு மந்திரோபதேசத்தால் ஊமையாக்கிவைப்
பேன்நீயுமவுனமுற்றிரு அவர்வந்தழைப்பார் உன்னைகொடுத்துவிட்
டுப்பொன்னைப்பெற்றுக்கொள்ளுகிறேன் நீ அவர்பின்சென்று அவரு
க்குத்தொண்டுசெய்து சகலகலையுமறிந்து சிலகாலங்கழித்துவருகவெ
ன்றுவரங்கொடுத்தால் அப்படியே அகஸ்தியரும் உடனே அழைத்து
க்கொண்டுசென்றனர்பின்னிரு வரும் அவர்சொற்படி பொதியையில்
அவர்செய்யும்கிரியைகள் சகலமுமறிந்து இவரும் தெரியாதவர்போ
லிருந்தார் இப்படியிருக்குங் காலத்தில் சங்கப்புலவர்களில் நக்கீரரெ
ன்பவருக்குபத்து வருஷகாலமாய்தலை நோக்காடுகண்டு மெத்தவும்
துன்பப்படுகிறதை அவரது சீஷர்நச்சினார்க்கினியர் அகஸ்தியரைய
ழைத்துக்கொண்டுசங்கத்திற்குச் சென்றனர் இவர்மருந்துப்பையும்
கத்திரிக்குறடாசி குட்டாக்களுடன் அவ்விடஞ் சென்றனர் அச்செய்
திசீஷனாகிய இராமதேவனுந்தெரிந்து கொண்டு அவரும் பின்தொடர்
ந்தனர் உடனே அகஸ்தியருந்தலைநோக்காடு உடையநக்கீரருக்குத்த
லைகீறிமூளையைப்பற்றிக் கொண்டிருக்கிறதேரையை சிமிட்டாகொ
ண்டு தூக்கப்போனார் அதுமோசம்வருமென்றெண்ணி அப்போதுசீ
ஷனாகிய இராமதேவர் தடுத்தனர் அப்போது அகஸ்தியரும் கையசை
ந்தனர் உடனே ஊமையாகிய இராம தேவர்கைசாடைகண்சாடையா
ல் ஓர் பெரிய தாம்பாலத்தில் சலங்கொண்டுவரச் சொல்லிபக்குவமா
ய்த்தாம்பாளத்தைக்காண்பிக்க தேலறயானது மூளையைவிட்டுத்தண்

ணீரில்குதித்தது அப்போது இராமதேவர் குருவுக்குமுந்தி சீஷனானார் இவ்வல்லமைப்புத்திகளை அகஸ்தியர்கண்டு மெத்தவுஞ் சந்தோஷித்து இன்னம் தெரிந்தும்தெரியாத விஷயங்களையும்போதித்தார் உடனே தேரைவயித்தியஞ்செய்ததால் இராமதேவர் என்றபெயரைநீக்கி தேரையர் என்று பெயர்கொடுத்தனர் இப்படியிருக்க இவர் இறுமாப்புகொண்டு அனேகசரக்குகளையும் நாகமலை பொன்மலை பித்தளைமலை வெள்ளிமலை கந்தகமலை தாளகமலை இப்படிக் கொத்த அற்புதங்களைமானிடர் பிழைக்கவென்று உண்டாக்கினார்பின்னும் ஆயிரத்தெட்டுமாற்றுடையதங்க மலைநிர்மிக்கவேண்டுமென்று நினைத்து அனேகதபோதனர்கள் முனிவர்கள் வாசஞ்செய்யும்படி யானநாகலாவரமலையென்று சொல்லப்பட்ட மலைமுழுதும் மூலிகைகளினால் சாற்பிழிந்துமலைமுழுதும் பூசி இரட்டைத் துருத்திகொண்டு ஊதத்தொடங்கினார் அந்ததீபரக்கினியானது சித்தர் முனிவர்கட்குந்தகிக்க முடியாமல் அகஸ்தியருக்கு முறைய மிட்டனர் என்னையா என் குருவே தேறையனென்பவனுக்கு தாங்கள் ஞானோபதேசமும் சர்வ வித்தைகளும் போதித்ததால் லோகமெல்லாம் சித்தாய்ப்போய்விடும் மலைமேற்சிகரம்வரையில் இவன மீண்டுந் தீபாக் கினியானது நிர்வகிக்கக்கூடாதென்று கூறினார்கள் உடனே அகஸ்தியருங் கோபங்கொண்டு இவரை இண்டாக்கிழித்தெறிந்து பொதியைச்குப் போயினர் உடனே இவரது விசுவாசம்பெற்ற இரண்டு சீஷர்களங்கிருந்தனர் முன்தேறையரென்பவர்தன்குருவால் தனக்கிடை யூறுவருமென் றெண்ணி சஞ்சீவியாகிய உயிர்மூலிகையை அவ்விருவருக்கு மருளிச் செய்திருந்தார் உடனே அச்சீஷர்களிருவரும் இருபாதியாயிருந்த தேறையரென்பவரை யொன்றாய்சேர்த்து மூலிகைபிழிந்தனர் அவரும் உயிர்த்தெழுந்தனர் பின்னும் அனேக அற்புதங்களை லோகத்துமானிடர்களுக்கு விளைவித்தனரென்று பெரும்பாலும் பெரியோர்களால் கேள்வியுற்றோம் மேற்கூறிய இராயதேவர் யாக்கோபு என்பவருடைய சரித்திரவரலாறை அவரவர்கள் செய்த நூலின்முகவுரையில் பார்த்தால்தெரியவரும் இச்சரித்திரத்தை இந்நூல் திருத்திய ஆயுள்வேதபாஸ்கரன் கந்தசாமிமுதலியாரால்கேள்வியுற்றவரையில் அச்சிடத்துணிந்தனர்,

தேறையர்சரித்திரவரலாறு

முற்றுப்பெற்றது.

உ

கடவுள் துணை.

தெய்வீகதன்மைபொருந்திய

தேரையர்வயித்தியம்

நூல்

—*—

ஆதியாஞ்சிவத்தின் முதல்வா போற்றி
அரியயனுந்தேடரியபரனேபோற்றி
சோதியாஞ் சரஸ்வதிதன்பாதம்போற்றி
சொற்பெரியபொதிகைமுனிபாதம்போற்றி
வாதியாஞ்சித்தாதிப்பாதம்போற்றி
மகத்தானநாதாக்கள்பாதம்போற்றி
ஓதியான்வைத்தவயித்தியமன்னூரு
வுத்தமனேதேரையன்சொல்லுறுதியாரே. 1

பாரப்பா செந்தூரங்குளிகைவேது
பற்பஞ்சூரணக்கிறுதந்தயிலமெண்ணெய்
நேரப்பாதிராவகஞ்சற்கரைநெய்கற்கம்
நேத்திரமையஞ்சனமைமருந்துகற்பங்
கோரப்பாகுழித்தயிலம் புகையாக்கிராணம்
கூழப்பாண்டத்துவரெண்ணெய்குடிநீர்பூட்டு
சேரப்பாமெழுகுகண்டாலவிழ்தம்பத்து
செவித்தயிமூலிகையுந்தெளிந்துபோற்றே. 2

போற்றுவாய்நசியம்ரசாயனங்கியாழம்
பூச்சிபதங்கலிக்கந்துவளைவாலைக்
காற்றிடாய்குழம்புலேகிய கபாடங்
கட்டுமாத்திரைசுளிப்பச்சிலைதான்வித்தைப்
பாற்றிடாய்தோஷமிர்தமின்னூலாய்ந்துப்

பாங்கானவயித்தியரேப் பிசகாதொன்றும்
தோற்றிடாய்சிவசத்திப்பூசைதன்னைச்
சுக்கிரவாரமறவமாற்றுனஞ்செய்யே. 3

துருசுசெந்தூரம்.

செய்யப்பாதுருசுகளஞ் சிடைதான் ரெண்டில்
தீரயுத்தாமணிப்பாலிலூட்டியூட்டி,
பையப்பாமுழுகியபின்வளமேகண்டு பதரூதே
சுதிபொளியிலுலரப்போட்டு, மெய்யப்பா
அவ்விலைச்சாருட்டி வில்லைமேலுலர்த்தி
யிலையாட்டிகுகையேபண்ணி, வையப்பா
குகையினுள்ளே மருந்தை யிட்டேமண்சீலைசெய்
துலர்த்திப் புடத்தைப்போடே. 4

போட்டாகுக்கிடத்திற் செந்தூரிக்கும்
புகழானகொக்குமந்தாரைப்பூச் சாற்றில்,
நாடடாசெப்புதான்விராகன்பத்து நலமாக
யெழுவிசைகாய்ச்சித்தோய்த்து
ஆடடா குகையில்வைத்துருகும்போது
அப்பனேகளஞ்சிடைச்செந்தூரம்போடு
தேடடாவுருக்கிவெள்ளிக்கண்விட்டாடுந்
தெளிவாகச்செய்திடிலேந்ததுவாமற்றே. 5

வாதமுறை.

மாற்றிதுவா தமுறைவகையோசித்தி
வடிவானதுருசுகளஞ்சிடைதான்ரெண்டில்
போற்றிதுசிலைமன்னிப்பழச்சாருட்டி
பொருந்திடவேகிவசந்தி வெதுப்புத்தூளாம்
யேற்றிதுநல்லெண்ணெவிட்டுவையே
யிழிகாதிகுகையுள்வைத்தெரியச்செய்திப்பால்
நீற்றிதுவாணிவடிவாகத்தானே
நிலையானதுருசினுடகுருவைப்பாரே. 6

குருவென்ற துருசுகவஞ்சிடைதானென்று
கொடுங்கள்ளிப்பாலுழக்கிலீவாய்நீருந்
திருவென்றலிங்கமிடைபலஞ்செந்தீயிற்

சிறவோடிட்டப்பிறகமிட்டத்தின்மேல்வைத்து
உருவென்றநிறுமிழியாதைந்தாழி
ஓகோகோசுருக்கதுபார்மெழுகேயாகும்
பெரிதென்றதங்கம்விராகனிடையேகூட்டு
பேசாதேமேயுமிதை வெளிவிள்ளாதே. 7

விள்ளாதேசெம்பினிடையிருமூன்றொன்று
மேலானவெள்ளியிடையொருமூன்முகத்
தள்ளாதேகுகையுள்வைத்து தணலிட்டூது
சாதகமாயிளகியதுகண்விட்டாடுந்
துள்ளாதேமெழுகுவிராகனிடைதான்போடு
சோதிக்கயெடுத்திடுமாத்தாருகும்
கொள்ளாதேஆயிபதம்பூசைபண்ணி
கூறுகிறேன்குருமொழிபொய்யாதுமெய்யே. 8

மெய்யனைத்துந்திமிர்மாவாதம் வயறாதுங்கால்
வெடிப்புண்ணீர் வடிமேகங்குஷ்டந்தன்னைப்
பையமீறுமவிலாரி யிடைப்பலநூற்றெட்டு
பருதிபடயிரண்டங்கூலத்தோடத்தோடத்தைக்
கொய்யவைத்துங்கெந்தியிடைப்பலமைந்துய்ய
குன்றியின்மேலோடகத்திப்பலமுன்னுங்கு
வையகத்தும் வல்லாரிப்பலமுன்னுன்கு
மடவிகருந்துவரைவிரைப்பலமுன்னுன்கே. 9

நாங்கிடிவிலாரின்மேற்கவசமாச்சே
நாலுதுளைப்பாண்டத்துள்வைத்தோடுமூடி
தாங்கிமிர்ந்தயிடுக்கலசம்வைத்துமேதான்
தணலேறுதிரிபுடமண்சீலேசெய்து
ஓங்கிவிடிற்கிசப்புடமாமொன்றேபோடு
உலவாகத்தைந்தாறுங்கடிகைபட்டும்
வாங்கிடுவீரைங்கரனைப்பூசைசெய்து
மகத்தானமெய்க்குழித்தயிலமாமே. 10

ஆமென்றதயிலமிடைக்களஞ்சியொன்று
ஆரிசிபொரிமரவைசமணைக்கூட்டி
தேமென்லேகியமிதாகுவானோர்
தேவரிஷிச்சித்தருக்குத்தரிசித்தாடும்

ஓமென்றஅட்சரத்தைத் தியானஞ்செய்து
வோரிரண்டுப்பொழுதிலுமண்டலமேகொண்டால்
தாமென்றதிமிர்வாதம்குஷ்டந்தீரும்
நங்கையரைப்பாய்மிதியபோகரதென்றே. 11

சிவனார்வேம்புதயிலம்.

அன்றயிருவத்தொரு மேகத்தால்வந்த
அழிகுஷ்டம்வெண்கறப்புவெடிப்புண்ணூறல்
யென்றசிவனார்வேம்புபலனூற்றெட்டில்
அங்குலமாம்கொய் துகெந்திபலமோரெண்டு
கண்டுகருங்குன் றிப்பலமூவைந்து
கரும்பொன்னாவாரைவிரைப்பலமூவைந்து
வண்டுமெகிழ்வல்லாதிபலமூவைந்து
மடவிகருந்துரைவிரைப்பலமூவைந்தே. 12

ஐந்திதுவையிடிவேம்புகவசமாச்சே
யாறதுளேப்பாண்டத்துள்வைத்தோடுமூடி
தந்திவிடுதுளேயடியிற்கலசம்வைத்துத்
தணலேறுதிரிபுரமண்சீலேசெய்து
வந்தனைசெய்கிசபுடந்தான் மொன்றேபோடு
வாரைந்துநாழிகையுமனுகொண்ணுது
செந்திபதுஆறிலியைங்கரனைப்போற்றி
சிவசிவாபூசைசெய்து தயிலம்பாரே, 13

பாவென்றதயிலமிடைக்களஞ்சியொன்று
பழவரிசிப்பொரிமாவைச்சமனுப்கூட்டி
சேரென்றிலேகியமிப்பாகுந்தேவர்
சித்தருக்குஞ்செயமானசிவனார்வேம்பு
யேரன்ததந்தத்தோடுற வாகாமல்யிருபோது
மண்டலம்ரெண்டிதுவேகொண்டால்
பேரென்றமேகமதுசிதறிப்போச்சு
பெண்மயக்கந்தான்மாற்றிபவிழ்தம்பத்தே. 14

பத்துநுணுத்தோரிடத்தோலரசமீராழி
பழச்சாறுழாக்குமுலேப்பாலாழாக்கு
யெத்துகருபூனீர்களஞ்சிடைதான்
போடுயேற்றிரெண்டில்மாறுமல்

சுருகிடைந்தாற்கடிகைக்கட்டும்
அற்றுவிடுசன்னிசுரந்தோஷந்
தீருமனுபானமுலைப்பால்
விட்டிழைத்துவாங்கே. 15

லிங்கக்கட்டு.

வாங்கப்பாலிங்கமிடைப்பலமோரெண்டு
வன்னியிலோடப்பிறகமிட்டதின்மேல்வைதது
பாங்கப்பாமெய்யில்வடித்தயிலந்தன்னைப்
பதருதேசுருகிடைந்தாற் கடிகைக்கட்டும்
ஓங்கப்பாகுகையுள்வைத்தணலிட்டூதே
வோடாதுகம்பிபதைவெளிகுண்ணுது
ஆங்கப்பாசன்னிசுரந்தோஷந்தீரு
மனுபானமுலைப்பால்விட்டிழைத்துப்பாரே. 16

தாளகசெந்தூரம்.

பாரடநெற்கதிரினரிசிஞழி
பச்சையாயரைத்துலர்த்தெடுத்தக்கேளு
சேரடாதாளகத்துக்கவசஞ்செய்து
தீமூட்டிச்சட்டிவைத்துப்பதமாய்விட்டு
வேரடாபுதுகலசத்துக்குள்வைத்து
மிதிலோடுமூடியெரிக்கடிகைரெண்டு
ஆரடாவேந்துருகும்யெடுத்துப்பின்கேள்
ஐமூன்றுவருளியிடப்புடந்தான்போட. 17

போட்டிடமே கருதிவெளுத்திறுகிக்கட்டும்
புகைகாணிம்போதுகருகாமல்வெளுத்து
ஆட்டியெடுத்தாறியபின் கவசம்நீக்கி
அப்பனேயுருகிமணி வெளியாகும்பார்
கூட்டிடுதேன்திரிகடுகுகியாழமிஞ்சி
கோதை முலைப்பாலிழைத்துருபோதுண்ணு
ஓட்டிடுமேசன்னிசுர மிரும்பற்காசம்
உத்தமனேபத்தியம்நேரயறிந்துக்காட்டே 18

காட்டடா அப்பிறகத்திற் பழச்சார்விட்டுக்
கடிகையுமிட்டாட்டிடவேமயனம்போலா

மாட்டடா தாளகத்துக் கவசஞ்செய்து
வாதித்தன் முன்னுலர்த்திச் சிறுபாண்டத்துள்
நாட்டாமணலைசொரிந் ததனுள்வைந்து
நாட்டியெரிக்கடிகையுமேழ் செந்தூரிக்குஞ்
சூட்டடாயிஞ்சிரசத்தனுபானங்கொள்
சுரஞ்சன்னியிருமலறம் வோடும்பாரே. 19

பாஷாணக்கட்டு.

பார்த்து துய்யப் பாஷணம்பலமேரெண் டில
பரிந்திருசாமஞ்சுருக்குவராகத்தினெய்
சேர்த்துசோபையவந்திரச்சிக்கவசம்பாரு
திறந்தயிருசட் டியில்மண்சீலைசந்தாம்
மார்த்துபெய்யக்கொக்குபுடமணிபோற்கட்டு
மைந்தனேமிளகுகியாழத்திற்கொண்டால்
வேர்த்து செய்யசன்னி சுரந்தோஷந்
தீருமீரு துபத்தியமுந்துக்கூட்டே. 20

கூட்டிடுபூவரசின்வேர்பலமாறைந்து
கொள்ளில்க்கருஞ் சீரகமும்பலமீரைந்து
நல்கொருபேருரையாள்பலமீரைந்து
நல்லதொரு பேருரையாள் பலமீரைந்து
மாட்டிடுமுத்தெண்ணைபடி யிருமூன்றிட்டு
மாறுமறகதிர்புடமண்டலமூன்றிப்பின்
மூட்டுதூபங்கொடுந்துப்பலமொன்றுக மூவைத்து
தினமருந்து முறியும்வாய்வே. 21

வாய்வதிகந்தோள்வாதமேகஞ்சூலை
வாய்வாதம்பலவாதந் தொண்டைவாதம்
ஒய்வதிலுங்குடல்வாதம்யிடைவாதந்தான்
உருளையொடு துடைவாதஞ்சந்துவாதந்
தேம்வதிலுங் குதிவாத முழங்கால்வாதஞ்
சீரானதண்டுயிளங்கெண்டைவாதம்
நோய்வதிலுஞ் சற்வாங்கவாதந்தீரும்
நூராதே புளிப்புகைசொல்லறிந்துபாரே. 22

தேர்தராசனெண்ணெய்.

பாரப்பாவுள்ளாத்திச்சாரீராழி
பாங்கானசங்குப்புச்சாரீராழி
வேரப்பாயீருள்ளிச்சாரீராழிவேசரியின்
பச்சைவெற்றிலைச் சாரீராழி வாரப்பா
களற்கொட்டிச் சாரீராழிவாங்கு நுணாவின்கொழுந்துச்
சாரீராழி சேரப்பாநீலியிலைச்
சாரீராழிசேர்முடக்கொற்
றானசார் யீராழிக்கூட்டே. 23

மேகராசனெண்ணெய்.

கூட்டிடாய்வெள்ளுள்ளிப் பலமோ
வைந்து கொள்ளிகருஞ்சீரகமும்
பலமோவைந்து ஆடியாமணக்கெண்
ணெய்ப் படிநால்விட்டு அடுப்பினில்
வைத்தெரிமெழுகுப்பத்தைப்பார்த்து
காட்டிடாய்வொருமண்டலமேகொண்டால்
கருமேகந்திமிர்பெருநோய்க் குஷ்டந்தீரும் ஊட்டிடாய்ப்
பொரிமிளகு நீரோடன்னம்வுத்தமனேபுளிபுகையுந்தள்ளுதள்ளே

கண்ணிலிடு பொற்றலையுங்குமரிச்சோற்வெண்
காக்கையொடு யின்னன்கு வுலர்த்திவாங்கி
யுள்ளிலிடுவெவ்வேறுயிடித்துச்செய்து
வுத்தமனேவகைக்கொன்று பலமுவைந்து
பெண்ணிலிடுவெள்ளுள்ளிப் பலமூவைந்து
பேரானநானநல்மிளகு பலமூவைந்து
மண்ணிலிடு குமரிச்சோரசம்விட்டாட்டி
மயனம்போலானவுடன் வில்லைத்தட்டே. 25

தட்டப்பாகடற்பிளிவித்ததுபோலுந்தான்
சதிரானகதிரொளியிலுலரச்செய்து
கட்டப்பாசாடியிலா மணக்கோடெண்ணெய்
காய்ந்ததொருவில்லையெடுத்ததிலேபோட்டு
விட்டப்பாகதிர் புடமண்டலமேவைத்து
மேகமரையாப்பிசுவுசூலைருன்மம்

மட்டப்பா யெண்ணெய்பலம்வில்லைரெண்டு
வாங்குமுப்புபுளியாகதுவந்துகேளே. 26

பிள்ளையில்லாதவளுக்கு சஞ்சீவிஎண்ணெய்.

கேளுநுணுவின்கொழுந்துச் சாரீராழி
கெடியான சித்தாமணக்கெண்ணெய்யீராழி
வேளுகருஞ்சீரகமுங்களஞ்சேரைந்து மீறியதோர்
பேருரையாள்களஞ்சேரைந்து தாளுமிதரேவல்
சின்னிக்கழஞ்சேரைந்துதட்டிப்போட்டெரி
மெழுகுப்பதத்தில் வாங்கி நாளுமிது
வொருபலமேதினமேகொண்டால்
நாடுமேசூலைக் கிறந்திப்புண்போமே. 27

மேகத்தெண்ணெய்.

போமடாசித்தரத்தை மோடியோமம்
புகழ்மிளகுதிப்பிலிபேரில்லான்சுக்கு
நேமடாகருஞ்சீரகமதுரமுள்ளி
நிறைசெய்வோர்வகையொன்றுபலமேதூக்கு
நாமடாமுசுக்கைச்சார் வெள்ளாட்டின்பால்
நற்பச்சைமஞ்சளின்சார் வகையோநாழி
ஆமடாயெள்ளெண்ணெய்ப்படிதானென்று
அனலிட்டுயெரித்தெருக்கன்போடே. 28

நேத்திரவாய்வுக்குத்தயிலம்.

போட்ட்வுடன்பொரிந்துமலர்பொன்னும்போது
பிடித்துப்பார்மெழுகுபதம்வடித்தெண்ணெய்யில்மூழ்கு
ஓடிவிடும்பீனிசங்கபாலசூலை
ஓகோகோநேத்திரசூலையொழியும்பாரு
நாடியேநொச்சியிலைவென்னீராகும்
நலமில்லாவாய்வுபதார்த்தத்தைத்தளிள்
தேடியேயெட்டிரண்டுத்தமூழ்கு
சேராதுசன்னியினோய் நீங்குங்காணே. 29

சற்பூரசிலாசித்துபற்பம்.

காணப்பாசலாசத்து பலமோரெட்டு
கவசமிடுசோரிமண்சீலைசெய்து

தாணப்பவாளிபெழுமூன்றத்தொன்று தாக்கு
புடம்பீறுமரைகழைஞ்சிதூக்கு
சேணப்பா வாரை தளிர்சமறுகப்பூ
சேரவரைத்திரக்கழஞ்சுகவசஞ்செய்து
தோணப்பாநாளொன்று யிருபொழுதுங்கொள்
சொற்பெரியமேகமதுவொழியும்பாரே. 30

பார்வகத்திப்புஙகயிலையுமிதிப்பாவற்காய்
பழைய துமோர் தயிர்பால்பூசினிக்காய்மட்சங்
தூரகத்திச்சிறுபயிறு ஆவினெய்யன்னநதுடர்ந்
துண்ணவெள்ளா டடிறச்சிப்பண்டைக்காயம்
சீரகத்தினிடைபலங்கால்வறுத்துநீர்விட்டு
சேரெரித்தரையா ழாக்கிறக்கிக்கொண்டு
ஆறவைத்துக்கற்கண்டுநெய்சேர்த்துக்கொள்
ளதிமோகந்தள்ளுதள்ளுகண்டிடாயே. 31

கலைக்கோம்புபற்பம்.

கண்டிடுவாய்க்கலைக்கொம்புபலமீரைந்து
கற்ணையாய்க்கொய் துமேசெராய்கள்போலே
குண்டுமேசேராயைக்கவசஞ்செய்து
குறையாமற்கெசபுடம்போட்டெடுக்கீரும்
திண்டிடுங்கல்வத்திலிவையேற்றிப்
பின்திறமாகச்சன்னியரைக் செடிவையாறு
வெண்டிடுகொள்மூங்கிற்குழாயதனுள்
வைத்துமேலானமேகபதிபஸ்பமாச்சே. 32

ஆச்சப்பாபஸ்பமிடைக்கழஞ்சித்தூக்கி
யந்தயிடையாவாரைத்துளிராவினெய்
தேச்சப்பாமத்தித்துயிம்மூன் றுங்கூடித்
தினகரனைப்பூசைசெய்துயிருபொழுதுந்தான்
மூச்சப்பாயிப்படிமண்டலமேகொண்டால்
மூனைக்கெட்டுப்பிரமியமோரெட்டுத்தீர்ந்து
போச்சப்பாயிச்சாபத்தியமேகொண்டால்
பொல்லாதுபாய்மிதியப்போகாதுள்ளே. 33

உள்ளத்தேகாந்திதருங்கமலம்புண்ணும்
யுருகியநெய்பெருகிவிழும்வெடிமேகம்போம்

வெள்ளைசீந்திற்கொடிமங்களவாரத்தில்
மேலுள்ளசெவ்வகத்திப்பலமீரைந்து
துள்ளச்சேர்த்திடியாவின்பாலாழாக்குத்
துடியாகவடித்துசெய்பீராழாக்குக்
கொள்ளச்சேசீனிபலமதிலேபோடு
கொடுத்திடுவாய்நாலாறின்குணமிதாமே. 34

சீந்திற்குழம்பு.

குணமென்றுபத்தியமேன் கூறக்கேளீர்
கோதையொடுபாய்மிதியப்போகாதிவ்வாறுங்
கணமென்றுயேசையொட்டாதேவெந்தக்
கல்சத்திற்பழவரிசியன்னம்பொங்கி
மணமென்றுஞ் சிறுபயறுவறுத்தேக்கொள்ளை
வாயோசைக்கதிரொளியும்வாய்வாகாது
சினமென்றுபுகையிலையும்புளிகல்லுப்பு
சேராதேயிளவென்னீர்சாதங்கூட்டே. 35

கூட்டுமிறுதாரசுங்கிகழஞ்சிடைதான்மூன்று
கூறியவெண்மொச்சைக்கழஞ்சிடைதான்மூன்று
மாட்டுகருமிளகுகளஞ்சிடைதான்மூன்று
வகைவேறுதூளதுசெய்வடியிட்டேபின்
மீறட்டுவகையொன்றுவிராகனிடையன்னத்தெளி
வதுவிட்டாழாக்கிற்றினமூன்றுங்கொள்
ஓட்டுமிதுமேகமதை யணுகொடாம
லுத்தமனேயுப்புபுளிப் புகையுந்தள்ளே. 36

அகோரிமருந்து.

தள்ளுகொடிக்கள்ளி துளிர்பலந்தானென்று
தாக்குகருமிளகுகழஞ்சிடைதானென்று
கொள்ளுமுடியுள்ளிக்கழஞ்சிடை தானென்று
கூட்டியரைத்துண்டையினால் ஒன்றேபோக்கி
யுள்ளுமுடில்மூன்றுவிசையவிழ்த்தத்தோட்டே
யுத்தமனேயடக்காய்வெள்ளிலைமோர்நாழி
துள்ளுவடி மேகமறுந்தினமூன்றுங்கொள் துடர்ந்
தன்னஞ்சிறுபயர்நெய்யுறவாந்தீத்தே. 37

பெரும்பாட்டுக்கு மருந்து.

தித்தித்துசாரணைவேர்முக்காவேளை
சமூலமுமேயிடித்துவடியிட்டேபின்
சித்தித்துக்கங்குருவை யரிசினுழித்
தெள்ளுமாவுமிடித்து ரெண்டுஞ்சமனுய்ச்சேர்த்து
மத்தித்துக்களினுள் மூன்றுண்ணத்தீருமல்லாமற்
செம்பருத்தியிலையும் பிஞ்சுங்குத்தித்துச்
சாரவுரி குழம்பாய்வாங்குகூட்டுச்
சமனெனுமிச்சம்பழச்சார்தீரே. 38

மதுக்குழம்பு.

தீருவதுகேளிலுப்பைபட்டதன்னை
தெள்ளுபொடிசெய்ததொரு நாழிச்சார் வாகு
கூறுவதுஐங்கரனை பூசைசெய்துகொடுத்திடுவாய்நாள்
மூன்றிற்குணமேயாகும் கோருவதுயிம்மருந்து
கைபாகஞ் செய்துகொடுத்திடுவாய்
நவியாளர்தங்களுக்கு தீருவதுயிளவென்னீர்
சாதங்கொள்ளு நேராதே புளிப்புகை
யுப்பதுவுந்தள்ளே. 39

தள்ளுபனைச்சாரதிலேபலமெட்டாவின்
தன்விழுகின் தளிபலனுலதிலாட்டிட்டு
கொள்ளுசெயந்தின்மேழ் சூதகத்தின்வாய்வு
குடிவிட்டுமலட்டுவலிமலட்டுப்பூச்சி
துள்ளுமிதுமாண்டு மலர்த்தோடே வீழுஞ்
சோதித்துயிம்முறைத் தப்பாதுபாரு
விள்ளுவதுபந்தியந்தானறியக்கேளு
மீறுதேபுளிபுகையை யறிந்திடாதே. 40

உள்ளிக்குழம்பு.

அறிந்தவெள்ளப் பூண்டுமிடைப்பலந்தானென்று
அப்பனேகறியுப்புக்கவசங்கட்டி
பொரிந்தமண் சீலைரெண்டிதவாய்க்கூட்டிப்
புடம் வறளி மூன்றதுவிட்டிடுதோற்போக்கெரிந்த
நெல்லிஞ்சிரசமரையாழாக்குத் தெளிவாக

விட்டரைத்து மூன்றுங் கொள்
சரித்தருசூதகத்தின்னேய் தவறுண்டேபோம்
தப்பாதுபுளிப்புகையைத்தள்ளிப்போடே. 41

போடப்பாசித்திரமூலிபின்வேர்பட்டை
புதியதாய் மூன்றுபலம்நிறுத் துவாங்கித்
தேடப்பாதிரிபலையு மிளகுகருந்திப்பிலிதிறமாக
சீரகஞ்சித்தரத்தையோமம் நாடப்பா
தாளிசப்பத்திரிக்கார்போக நலமான
வால்விளங்கங்கிரும்பு கோஷ்டம்
ஆடப்பாகுருசானியக்கிருகாராம்
அரத்தைகருசீரகந்தேக்கதுவும்பாரே. 42

சூதகவாய்வுக்குலேகியம்.

பாரடாசதகுப்பை நறுக்குமூலம்
பாங்கானவகைபொன்றுசமூஞ்சிரெண்டு
சேரடாஅப்பாளாகாரம்பலந்தான் மூன்று
திறமாக யிடித்தவுடன் வடியிட்டேன்பின்
கோரடாசீனியிடைப்பலமூவைந்து கொதியிட்டுப்
பாகஞ்செய்யதனுள்போட்டு நேரடாதேனதிலே
பலமாறுயாவின் னெய் பலமாறுவிட்டு
லேகியமாய்க் கிண்டே. 43

கிண்டப்பாதாகமொடு தீபங்காட்டிக்
கெசமுகனைமனத்துள்ளேத்தியானஞ் செய்து
கொண்டப் பாபாக்களவுயிருபோதுந்தான்
குறையாமல் மூவைந்தின மேயுண்டால்
விண்டப்பா வாய்வுமே யோனிச் சூலைவெளி
காணுவுதிரஞ் சூதகவாய் வின்னேய்
ஒண்டப்பா நில்லாது நிலைக்கெட்டோடு
முத்தமனேகுரு மொழித்தப் பாதுசெய்யே. 44

பேய்குமட்டிக்காய்சூரணம்.

செய்யடாபேய்குமட்டிக்கா யிரண்டுத்தோல்
சீவிவிரையெடுத்துப்பயர்போலக்கொய்து
வையடாபீங்கானுள்பலமிந்துப்புமாறுமற

கதிரொளியி லுலர்த்திட்டேபின்
கையடாகல்வத்திலரைத்துவாங்கி
காட்டாயோர்கழஞ்சு பனைவெல்லத்துள்ளே
பையடா தாதுவையின் குணமுங்கண்டு
பலனுவி லுறவாகாதெரிந்துவுண்ணே. 45

கஸ்தூரிக்குழம்பு.

உண்ணவேவாந்திவரும் வயர்பேதிக்கும்
ஓகோகோ கிறுமியெல்லாமுழன்றுவீழ்கும்
பண்ணவேசிறுபயரு வறுத்தெடுத்து
பச்சரிசியிவ்விரண்டு பொங்கித்திணை
திண்ணவேமலங்கட்டும் பித்தம்போக்குஞ்
சீரகஞ்சுக்கொடுக்கியாழத்தைக்கொள்ளு
குண்ணவேவென்னீராறகைகால்சுத்திக்
கூறுகிறேனச்சமொன்றில்லேக்காணே. 46

காணப்பாவாளமிடைப் பலந்தானென்று
பழஞ்சாணங்கலரத்திட்டுயிருகடிகையெரியிட்டேபின்
தோணப்பாமேலோடுபோக்கிநஞ்சை
யெடுத்துநெய்ச்சட்டிச்சிறுகீரைசேர்த்து
ஊணப்பா வறுத்து ஆமணக்கின் முத்து
வுடைத்துபருப்பெடுத்துவிடுகழஞ்சிரெண்டு
பேணப்பாலிங்கமொருகழஞ்சிவிட்டாடிப்
பிசகாமல்மெழுகுபதஞ்சிமிளிற்கொள்ளே. 47

அண்டவாதத்துக்குமருந்து,

கொள்ளவேகுண்டு மணிப்பிரமாணந்தான்
கொடுத்திடுவாய்பனைவெல்லங்கவசஞ்செய்து
துள்ளவேநொந்துநெந்துவயர்பேதிக்குந்
முடியாகமூன்றுதிரம்பித்தம்போக்குந்
தள்ளவேவென்னீராற் கைகால்சந்து
தளர்ந்துவரும்நித்திரை தான்செய்யாமல்
மெள்ளவேதயிர்ப்பயறுடன்னமுண்ணு
மேலானசுக்குகியாழத்தைவாங்கே. 48

வாங்கப்பாநேர்வாளத்தோலைப்போக்கி
வலுவானநஞ்சையெடுத்துக்கழஞ்சேரைந்து

பாங்கப்பாசுக்குபொடிகழஞ்சேரைந்து
பழையதொருபனைவெல்லங்கழஞ்சேரைந்து
ஓங்கப்பாகல்வத்திற்சாமமாட்டி
யுத்தமனேமெழுகதுபோற் சிமிளிற்கொண்டு
தாங்கப்பாகுன்றிடைப்போலத்தேனிலிட்டுத்
தரியாதுபித்தவயர்பேதிக்கேளே. 49

கேளடாவயத்துவலித்தீருந்தீரும்
கெடியானவாயுவஸ்துவெல்லாந்தள்ளி
தாளடாசிறுபயறோடன்னமுண்ணு
தம்பிக்கும்வாந்திவயர்பேதிக்கட்டும்
ஆளடாவென்னீராற்கைகால்சுற்றி
யப்பனேசயனந்தானாகாதாகா
வாளடாகொடுவேலிசீரகமுங்கூட்டி
வாங்கிடாய்மற்றொன்றுகாதன்றே. 50

அண்டவாதத்துமருந்து.

அண்டவாதம்விரைக்கீழிலிரங்கிவூதல்
அப்பனேவலிகாணுயவிழ்தங்கேளு
சுண்டவேர்பருத்தியின்பாலரையாழாக்குத்
துடியாகக்கொதியிட்டுயிளகிப்போகும்
யெண்டவேவசம்புபெருங் கொத்தானதாளு
யிடித்துவறுத்தொத்திடங்கட்டிடவேதீருந்
திண்டவேவாய்வுவஸ்தொன்றுகாது
தெளிவானகைமுறைகேள் செவிதன்னுத்தே. 51

கழலவாதத்துக்கு மருந்து.

உத்தகழல்வாதம்விரையேறும்நோகும்
ஊதுவயர்பொருமியுடனசோபம்போமே
முத்தக்களற் சிப்பருப்புசுண்ணம்வெல்லம்
முனையானதிப்பிலிவகைக்கழஞ்சுத்தூக்கி
நித்தமரைத்திப்படிநாள்மூன்றேகொள்ளு
மோடிகளற்கொடிவசம்புவுள்ளிதட்டி
மெத்தவருந்தொத்திடங்கட்டிடவேதீரு
மீறுதேவாய்வுவஸ்தெரிந்துநாட்டே. 52

மேற்கட்டுக்கும்.

காட்டத்திப்பிஞ்சிகெழஞ்சிடை தான்ரெண்டு
நவப்புளிபின்வித்துகழஞ்சிடைதான்ரண்டு
கூட்டித்தியாம்புகழஞ்சிடைதான்ரெண்டு
குறையாமலாட்டியிருபொழுதின்மூன் றுகொள்ளு
ஆட்டகத்தியோட்டகத்தின்சானத்தோடு
அரிந்துகளக்கொட்டியிலை வறுத்திட்டொத்த
மாட்டகத்திக்கட்டிடவே கழல்வாதம்பேர்ம்
வாங்காதேபுளிப்புகைகுதாதியாமே. 53

கேந்தகச்சற்கரை.

ஆதியடாகெந்தகந்தான்பலமோரெட்டு
அப்பனேசுத்திசெய்வாயாவின்பாலில்
பேதியடாவெண்சங்கம்பழச்சார்விட்டு
பிசகாமற்சாமமும்மோரெட்டேயாட்டி
சோதியடாகதிர்ப்புடவைத்திருக்கும்போது
துடர்ந்தரையீருள்ளுரசமிரு நால்சாமம்
யடாகல்வத் தோடுலர்த்திட்டேபின்
தவராது கெந்தகச்சற் கரைபிதாமே. 54

சூலைகைகால்பிடிப்புக்குகியாழம்.

ஆமப்பா நாளொருபத் திருபோதுந்தான்
அரையாகுங்கழஞ்சியிடைத் தேனிற்கொண்டால்
போமப்பாசூலையொடு கிரந்திவாய்வு
புண்ணுகைகால் குடைச்சலமார்நோய்வெல்லாம்
போம் ஓமப்பா அட்சரத்தைத்தியானஞ்செய்து
வுத்தமனேயீசனுமக் குரைத்தவாறு
தாமப்பாவாய்வுவஸ்துகளொன்ருகா
தப்பில்லைரோய்கலுஞ் சாதிப்பாயே. 55

சாதிப்பாய்மாவிலிங்கப்பட்டைசுக்கு
சாரணைவேர் பிறப்பன்வேர்பாங்கிப்பட்டை
சோதிப்பாய் புணற்றண்டுசங்கம்வேரு சித்தரத்
தைவகைக்கி யிரு பலமேதூக்கி வாதிப்பா
யிடித்தூளாகச்செய்து வைத்திடவே
யெழுபொழுது கியாழத்தைக்கொள்ளு

வீதிப்பாய்வாய்வுபிடி குடைச்சல்தீரும்
வேண்டாதே புளிப்புகையுப்பதுவுந்தள்ளே. 56

சகலவாய்வுகளுக்கும்பரங்கிபட்டைசூரணம்.

தள்ளடாயேழாறுபலம்பரங்கிச் சக்கைத்
தன்னையுலர்த்தி யிடித்துவடியிட்டேபின்
விள்ளடாபாண்டத்தையடுப்பில்வைத்து
மேலானதிங்கபொடிபலமைந்திட்டு
யுள்ளடாவாயிதன்னி லொருசீலைச் சுற்றியுதிராமல்
சூரணம்வைத்திடுவாய்மூடி துள்ளடா
சாமம் யெரிக்கப்ப தங்கமாச்சுசுத்த
புதுகலசத்துள் பதனஞ்செய்யே. 57

செய்யப்பாடலமிடைதா னிருபொழுதுங்
கொள் சிவசிவாமண்டத்திற்தெறிக்கும்வாய்வு
மெய்யப்பாமேகமருஞ் சூலையோடும்
வெடிகண்டமாலையறும் பிடிப்புத்தீரும்
முய்யப்பாதயிரிறைச்சிப் பால்மோர்பட்சம்
முகருதே புகயிலைபைமனம்வையாதே
பையப்பாபழையதொடுப்புளியைத்தள்ளு
பறந்திடுமேநோய்களெல்லா மறிந்திடாயே. 58

சகலமாந்தங்களுக்குமெண்ணெய்.

அறிந்திடுவேப்பெண்ணெய் பலமோவைந்து
ஆமனக்கோடெண்ணெய்யிலுடைபலம்நாலைந்து
தெரிந்திடுகோபுரத்தைத் தாங்கிப் பூண்டுச
மூலமுமிடித்துச்சார்சமனுய்க்கூட்டி
பரிந்திடுவெள்ளுல்லி கருஞ்சீரகந்தான்
பாம்புவசம்புவகைக்கி யிருபலமாட்டிட்டு
வரிந்திடுபேய்க் குமட்டிக்காயிரண்டுவாங்கி
வாகுடனேகவசமிட்டுப் புடத்தைப்போடே. 59

போட்டிடவேகரியவெந் தளரும்போது
போக்கிடுஞ்சோலுள்ச் சுளையைப்பயர்
போறகொய்து நாட்டிடவேபெண்ணெய்யில்
விட்டுப்பிலேற்றி நாடியெரிமெழுகுபதம்
பிடித்துப்பாரு ஆட்டிடவே சூடகத்தின்

பீங்கானுள்ளே அப்பனேவைத்துப் பலமரைப்
பொழுகொள் மூட்டிடவேபோர்மாந்தம்
நீங்கிப்போகும் முகராதேபுளியுப்புமுறிந்துபோமே. 60

சூலையெரிச்சலுக்குலேகியம்.

போமப்பா ஆறெட்டுப்பழச்சார்தன்னிற்
போட்டிடு நற்சீரகந்தான் பலமீரெட்டு
ஆமப்பாகதிர்ப்புடம்வைத் துலரச்செய்து
அறிந்திடாய் நீமதுரமவைபோலேகியம்
வாமப்பாமுளகுசன்னராஷ்கஞ்சுக்கு வால்
மிளகு தாளிசப் பத்திரிக்கிராம்பு தாமப்பா
வகைக்கிக்காற்பலமேதூக்கித் தானிடித்துத்
தூள்வடிசெயிதமாய்க்கூட்டே. 61

கூட்டப்பாயிஞ்சிரச யாழாக்கொன்று
கூர்பனையுங்கற்கண்டுபலமீரெட்டு
மாட்டப்பாதேனதிலேபலமோரைந்து
மத்தனையுஞ்சட்டியிலிட்டடுப்பிலேற்றி
மூட்டப்பாசெந்தணலைப்பாகஞ்செய்து
முன்பொடியைத்தூவினெய்யார் பலமிட்டாட்டி
ஊடப்பாபாக்களவு யிருபொழுதுந்தான்
ஒழியுமேசூலையெரிச்சலுகந்துகேளே. 62

சூலையெரிச்சலுக்குலேகியம்.

கேளப்பாசித்தரத்தைமிளகுகிராம்பு
கெடியானவதிமதுரம் பரங்கிப்பட்டை
தாளப்பாசீரகஞ்சாபத்திரிதேக்கு தாளிசப்
பத்திரியக்கிராகாரங்கோஷ்டம்வாளப்பா
திப்பிலிபேரரத்தைச்சோம்பு வால்மிளகு
வகையிலொரு பலமேதூக்கு ஆளப்பா
கைத்திறமாயிடித்துத் தூளா
யப்பனே சீலைவடிச்செய்துக்கொள்ளே. 63

கொள்ளடாவாகாசத்தாமரையிஞ்சிச்
சார் கூட்டுமுசுக்கைசார் வகையாழாக்கு
உள்ளடாகதண்டுதேளுழக்குக்கொண்டு
உத்தமேன கற்கண்டுபலம்நாலைந்து

மெள்ளடாபாகஞ்செய்தூளைப்போடுமீறிய
தோராவினெய்பலம்நால்விட்டு
தள்ளடாயடிப்பத்தித்தீய்ந்திடாமல்
சாதணையாயரிகிருந்துசாமமாட்டே. 64

இருமலுக்குலேகியம்.

ஆட்டுவாய்லேகியம்போலாகக்கிண்டி
யப்பனேபாக்களவு யிருபொழுதுந்தான்
மூட்டுவாய்மண்டலமோரிதுதப்பாமல்
முடிவணங்குமிருமலதுமுனைகெட்டோடுங்
கூட்டுவாய்காஞ்சொரிவேராவின்பாலில்
கொதியிதைவடிசெய்திரவிற்கொள்ளு
நாட்டுவாயம்பிகையைத் தியானஞ்செய்து
நாடாதேதிரோதாய்மாய்கைசூதே. 64

சூதம்வெள்ளைப்பாஷாணங்கெவுரி
கெந்திதொட்டிப்பாஷாண மனோசிலைமால்தாரம்
நீதமுள்ளநெறிவிஷமுங்கருஞ்சிராவும்
நிறையொன்றுவகைவிராகனிடைதான் தூக்கி
போதமுள்ளயிம்மருந்து கல்வமுத்து
பொற்கொடியேசமநிடையாய் சேர்ந்துக்கொள்ளு
யீதமுள்ளப்படிமிளகு சமனாய்சேர்த்து
யீரேழுசாம முடனரைத்துவாங்கே. 66

இராமசரபாணம்.

வாங்கியதோராமசம்பணமேதூக்கி
மைந்தனே யிஞ்சிரசத்தனுபானங்கொள்
ஓங்கியதோற்காக்கை வலிசுவாசகாசம்
உளைப்புவாய்வுக்குடைச்ச லிளைப்புந்தீரும்
நீங்கியதோர்மேனி ரசத்தனுபானங்கொள்
நில்லரிதுயெலிவிஷங்கள் நிலைக்கெட்டோடும்
பாங்கியதோரிம்முறைத்தப்பாதுசெய்தால்
பத்தியமுங்கார்த்திடுநோய் வறிந்துக்கூட்டே. 67

கூட்டடாபாஷாணக்கழஞ்சேரைந்து
குலமான மிளகுகழஞ்சிடைமூவைந்து
ஆட்டாவலுவாகச்சாமமைந்து அனுபானம்

பணவிடை வெள்ளிலையின்சாற்றில்
மாட்டடாதும்பரசம் மேனிச்சாறு
மாதுளம்பூதனிச்சாறுவகையாழாக்கு
நீட்டடாஆடாதோடைச்சாற்றிதன்னில்
நில்லரிதுபல்விஷனேய்சொல்லுவேனே 68

சொல்லுவதுபாலேதனைக்கேளுகேளு
சூதமடாக்கழஞ்சியிடையொருனலேந்து
வெல்லுவதுஅயப்பொடிநான்கழஞ்சேரைந்து
மேலானசெங்கல்மாகழஞ்சேரைந்து
மல்லுவதுபசுமஞ்சல் கழஞ்சேரைந்து
வைததுவறுக்களிப்பாக்குக்கழஞ்சேரைந்து
மெல்லுவதுகல்வத்திலிவையேற்றிப்பின் மெத்தனவே
பேய்ப்பீர்கன்பழச்சார்விட்டாட்டே. 69

ஆட்டுவாய்பதினறுசாமமப்பா அப்பனே
யெடுத்துடன்பேய்ப்பீர்க்கிற்கூடில்
யாட்டுவாய்மண்ணணைத்துமேல்மூடிட்டு
மண்டலமூவைப்பாய் மசையொட்டாமல்
போட்டுவாய்சீலைதனில்வடியிட்டே.பின்
பொற்பணத்தினிடைத்தூக்கி யனுபானங்
கொள் ஊட்டுவாய்விடத்தாசைச்சூரணம் நெய்தன்னி
லுத்தமனே மெழுகதுபோலுள்ளுக்கீந்தே. 70

யீய்ந்திடவே காசமொடுயீளைவாய்வு
யிளைப்புக்கண்டமாலைக்கிரிந்திப்புண்ணேடும்
நேர்ந்திடவேயெள்ளெண்ணெய் தித்திப்பு
வொன்ருகாநிலையில்லாவாய்வுவஸ்து
வொன்ருகா தாகாசேர்ந்திடமட்சமிறைச்சி
யொன்ருகா துதிறமான நெய்புளியோடுப்புக்கூட்டி
யார்ந்திடவே நரைமாறுந்திரேகங்கொட்டி
யப்பனே பூசைபண்ணு மாதித்தோனே. 71

தேள்மாத்திரை.

ஆதித்தவாரம்மாவாசிகிருணம் அன்றுவெள்ளை
யெருக்கின்கீழ்பூசைபண்ணி
சோதித்தவடதிசைவேரதனைக்கொய்து சொற்களற்சி

வித்துநென்மறையின்வித்து
பேதித்தநற்சலம்விட்டுரைதான்செய்து
பெருங்குன்றிப்போரறிரட்டி யுள்ளுக்கீய்ந்து
சாதித்தவாய்தனிலுங்குளூரப்பூசந்
தரியாதுதேள்விஷந்தாப்பர் துபாரே. 72

பாரியபேய்ப்பீர்க்கன்விரை முலைப்பால்விட்டு
பஞ்சுபோல்த்தட்டியிழைத் துணியிற்
கட்டி யூரியபின்னசியந்தா னுடனே விட்டு
உத்தமனேயெலுமிச்சப்பழத்தைநாலாய்
கீறியபின்தேத்தான்வித்திழைத்துள்வைத்து
கெட்டியாய்ப் பேயத்தியிலையைசுற்றிமீறிய
பாண்டத்தினிலிவ்விலையிட்டேநீர்மிதவாக
விட்டனுள்நடுவில்வையே 73

வையடாபாண்டத்தை பெருந்தீயிட்டு
மாறுமலெரித்திடுவாய் காமம்ரண்டு
கொய்யடாதுணுக்குரெண்டிருபொழுதுந்தான்
கொண்டிடவே மண்டலத்திற்பயித்தியமோடுங்
கையடாக்கயரதினலைப்பின்கட்டாய்நீர்
கடினமாய்விடுமூச்சிவிடவொட்டாமல்
செய்யடாசனிவாரங்தேவாலயத்திற
தெறிக்குமேபித்தமெள்ளுத்தீபமேற்றே. 74

கருவங்கம்.

ஏற்றிடுக்கருவங்கம்பல மோரைந்துயிதமாகத்த
கடாக்கிக்குருவைப்போற்றிப்
பார்த்திடுமருந் தணையாட்டதனுள்
வைத்துபதாமற்போடுபுடங்கெசமே
முக்கால் ஆத்திடுபெற்பமிடைப்பண்மேதூக்கி
யனுபானம்நெய் யுடனேயறிந்துக்கூட்டி
சேர்த்திடுநாளிருபத்திருபொழுதுங்
கொள்ளதீராகரோய்கலுந் தீரும்பாரே. 75

வெள்வங்கபற்பம்.

பாரப்பாவெள்வங்கம் பலமோரைந்து
பாங்கானப் புளியிலைப்போற்றகடாய்தட்டி

நேரப்பா வேப்பிலையைகோணித் தாட்டி
நிகழாமல்மஞ்சள்தூள்தூவி தூவி
சேரப்பாத்கடதிலேபரப்பிசுற்றித்
திறமாககட்டிகிசபுடப்போடபஸ்பம்
மாரப்பாபணவிடைதானெய்யோடுங்
கொள்வாங்காதநோய்பலமுமறித்துப்போமே. 76

கருவங்கப்பற்பம்.

போமப்பாகருவங்கம்பலமோரைந்து போட்டிது
வலுவானத்தகடுத்தட்டி ஆமப்பா ஆடா
தோடையிலையைமாட்டி அப்பனே பிசகாமற்
கவசஞ்செய்து தாமப்பாதேங்காய்க்
கொட்டாங்கச்சிக்குள்தவறுமல்வைத்துடனே
மேல்மூடிட்டு நேயப்பாகசப்புடத்திற்
பற்பமாச்சு நெடியபணவிடை
நெய்லறிந்துபாரே. 77

வெள்வங்கம்.

பாரேனீவெள்வங்கம்பல மோரைந்து
பாங்காக் குன்றதுபோற்றிறட்டிவாங்கி
நேரேனீகுப்பைமுள்ளி லிலைதானட்டி
நெகிழாமற் குன்றதின்மேற்கவசஞ்செய்து
யேரேனீகெசபுடத்திற்பற்பமாச்சு
யியம்புகிறேன்பணவிடைதானெய்யோடுண்ணி
தேரேனீபாய்மிதியொன்றுகாதாகா
சோாதுநோய்பலவுந்தெளிந்துகாணே. 78

கருவங்கம்.

காணப்பாகருவங்கம்பலமோரைந்து
கனத்ததோர்சட்டியிலிட்டடுப்பிலேற்றி
ஊணப்பாதுத்தியிலைக்கூடப் போட்டு
உத்தமனேவறுத்திடுவாயிருநால்சாமம்
தோணப்பா செப்பொன்னிறஞ்செந்தூரிக்குந்
தூக்குப்பொன்பண விடைதானுங்கொள்ள

பேணப்பாயாவின்னெய்யுட னூட்டிக்கொள்
பிறியாதநோய்பலமும்பிறியுந்தானே. 79

தானென்றகருவங்கம்பலமோரைந்து
தவறாமலாயிபதம்பூசைப்பண்ணி
மானென்றயிலுப்பைநெய் யதிலேசுற்றி
வளமானசட்டியிலிட்டடுப்பிலேற்றி
நானென்றகுமரி யிடவேர்க்கண்டித்து
நயமாகப்பருதிமுன் னுவறுத்திட்டேபின்
யேனென்றவிலாரிவிறகெரினுற்சாமம்
யிதமாகவறுக்கச்செந்தூரங்கொள்ளே. 80

கொள்ளப்பாபொற்பணத்தினிடையே
தூக்கிக்கூட்டுநெய்யனுபானமேகந்தீரும்
மெள்ளப்பாதேனி லிழைநாள்மூவைந்து
மீறியப்பக்கச் சூலைவாதந்தீரும்
உள்ளப்பாசீனியுறவாகக்கொண்டா
லுத்தமனேபித்தத்தோ ரேல்போகுந்
தள்ளப்பாபத்தியந்தா னென்றுமில்லைத்
தப்பாதுயிம்முறைமையச்சாதிப்பாரே. 81

அபபரக செந்தூரம்.

சாதித்துயப்பிறேகம் பலமோரைந்துதா
னிடித்துக் கொடிக்கள்ளிச்சார்விட்டாட்டி
பேதித்துவில்லை தனையுலாததிக் கொண்டு
பிசகாமற்கெசபுடமப்படியேபோடு
சோதித்துச்சிறுகீரைச்சாற்றிலாட்டி
வில்லைசுக்குப்போ லுலர்த்திக்கிசபுடமேபோடு
தீதுற்றஅருணனைப்போற் செந்தூரிக்கும்
சிவசிவாதேவிபதம் பூசைப்பண்ணே. 82

பண்ணடாசெந்தூரம்பலமேதூக்கிப்
பசுவின்னெய் திரிகடுகுகியாழமிஞ்சி
யெண்ணடாதேனிலனுபாணஞ்செய்து
யிருபொழுதுமண்டலமிப்படியேகொண்டால்
வெண்ணடாகாசமது யீளைகுன்ம
மீறியதோர்சன்னிசுரம்யிளைப்புவாய்வு

வெண்ணடாநல்லரிதுகிலேகெட்டோடும்
உத்தமனேயிச்சாபத்தியமாய்த்தேடே. 83

உப்புபர்பம்.

தேடடாவைந்துப்புப்பலமோரைந்து
திறமானவன்னிப்பட்டைச்சார்விட்டாட்டி
ஆடடாவில்லையிடித்துலர்த்திச்சக்கை
யப்பனேகீழ்மேலுங்கவசஞ்செய்து
போடடாகசப்புடத்திற்செந்தூரிக்கும்
பூசித்துக்கழஞ்சிடைதானென்றுதூக்கி
நாடடாதேனிலிழைக்குன்மவாய்வு
நாடாதுயிச்சாபத்தியங்கார்த்துவுண்ணே. 84

மஞ்சள்காமாலை.

உண்ணப்பாமாம்பட்டைசாராழாக்கு
வுத்தமனேயாவின்தன்பாலாழாக்கு
அண்ணப்பாயிரண்டுஞ்சேர்த்தேழுபோதுங்
கொள்ள வப்பனேமஞ்சள்காமாலைத்தீருந்
திண்ணப்பாயாவின்பாலோடேயன்னஞ்
சேராதேபுகையிலையும் புளியோடுப்புக்
கண்ணப்பாசொல்லுகிறேன்முறைபொய்யாமற்
காணலாமின்னமொரு சிந்திற்றண்டே. 85

தண்டுச்சாராழாக்கு ஆவின்பாலாழாக்கு
தனிப்பழச்சாராழாக்கிம்மூன்றுங்கூட்டி
கிண்டடாமத்தித்துநாளேழுக்கொள்
கெடியான மஞ்சள்காமாலைதீரும்
உண்டடாபத்தியமொன்றுமாகாதா
காதுத்தமனேயாவின்பாலன்னங்கொள்ளு
நீண்டடாமணிக்கட்டி ரவிக்கப்பண்ணி
நில்லரிது நோய்களுமதியுற்றுடே. 86

உற்றநிம்பழச்சாறயீராழாக்கு
ஒகோகோயிருள்ளிச்சாராழாக்கு
முத்தகையான்தகரைச்சாரீராழாக்கு
முதலானநீர்முள்ளிச் சாரீராழி

சித்தசங்கங்குப்பிச்சாராழாக்குச்சேர்த்திடு
வாதமடக்கிச்சாராழாக்குச்சேர்த்திடு
வித்தகோவின்னீரும்யெருமைமீரும்
வெள்ளாட்டுமீராழாக்குக்கூட்டே. 87

கூட்டிடுபொற்கடுக்காய்ப்பலமோரைந்து
கொடிதானஅரப்பொடியின் பலமோரைந்து
நாட்டிடுமஞ்சளிடைப்பலமோவொன்று
மகத்தானசிட்டமிடைப்பலமோரைந்து
நாட்டிடுவேருள்ளிப்பலமோவொன்று
நலமானசுக்கினிடைப்பலமோவொன்று
போட்டிடுகோயம்விராகனிடையொன்று
போட்டிடித்துலடித்திடுமூன்றுசாறிற்சேரே. 88

சேரப்பாகிளறிகதிர்ப்புடமேவைத்து
திறமாகக்கிண்டிடவேகளிபோலாகும்
நேரப்பாபெருகடியின்பிறமாணந்தான்
நேமித்துமிருபொழுதுஏழுநாட்கொள்
பேரப்பாசாமாலையில்லையில்லை
பேணுமேபுகையிலையும்புளியோடுப்பு
மேரப்பாபுளிச்சமோரன்னங்கொள்ளு
முறையின்னமுண்டுவுற்றுப்பார்த்திடாயே. 89

காமாலைக்குகலிக்கமாத்திரை.

பார்த்திடுசிறுமல்லிச்சாரீராழிப்
பாங்கானகையாந்தகரைச்சாரீராழி
சேர்த்திடுவெள்ளெருக்கின்சாரீராழி
திறமானசட்டியிலிம்மூன்றுங்கூட்டி
மார்த்திடுச்சிட்டமிடைப்பலமோரைந்து
வளமானயரப்பொடியின்பலமோவைந்து
யேற்றிடுமுளகுசுக்குஉள்ளியிம்மூன்று
மிடைவகைக்கோர்பலமுஞ்சாற்றாலாட்டே. 90

ஆட்டடாமயனம்போலாகும்போது
அப்பனேமுன்னுற்றச் சர்ற்றிற்போட்டு
காட்டடாபருகிப்புடங்கிண்டிகளிப்போலே
யிறுகிப்போலேயிறுகிப்போமரிசிப்பொங்கி

நீட்டடாளெண்ணெய்யதிலே
குற்றிநெருவேறகடிமருந்துகூடப்போட்டு
ஊட்டடாநாளெட்டுவயர்பேதிக்கும்
வொழியுமேகாமாலைத்தெரிந்துக்கேளே. 91

ஊதுகாமாலை.

கேளுகையாந்தகரைக் கீழ்க்காய்நெல்லி
கெடியானநிம்பத்தோடிம்மூன்றுக்கும்
நீளுவிடாதச்சாருவகையாழாக்கு
நெடிதானஅரப்பொடிபோற் கடுக்காய்ச்சுக்கு
தாளுநீவகையொன்று பலமோரெண்டு
சண்ணியரைத்தெடுகலசத்துள்ளேவைத்து
நாளுமொருபத்துபுதைத்திடுபூமிக்குள்
நாடியெடுப்பூசைபண்ணுறுதியாமே. 92

ஆமப்பாவிருபத்திருபொழுதுங்கொள்ள
அப்பனேவூதுகாமாலைநீங்கி
போமப்பாமொருஞ்சரதத்தோடுண்ணு
புகழானயீருள்ளியொக்கக்கூட்டி
ஏாமப்பாபுகையிலையும்புளியோடுப்பு
சாதிக்காலாகாதுதள்ளுதள்ளு
நாமப்பாசொல்லுகிறேன்முறைபொய்யாது
நன்ருனகலிக்கமொன்றுநாடிக்கேளே. 93

கேளப்பாநல்மணத்தாளிவேரை
கெடியானபழச்சார்விட்டாட்டியாட்டி
நீளப்பாகயிறுநீளுலரச்செய்து
நெடியபழச்சாறுடனேயெள்ளெண்ணெய்குத்தி
மூளப்பாவுரைத்துயிருகண்ணிற்போடு
முட்டைவெள்ளைக்கருபோலேவீழும்
காலப்பாயிப்படியேயைந்தேசெய்தால்
நாடாதுகாமாலையுணர்ந்துபாரே. 94

பாரப்பாகதலிப்பூமடலைப்போக்கி
பாங்கானவுள்மலரின்சாறுழாக்கு
மாரப்பாசட்டியொன்று அடுப்பில்வைத்து
வளமாகக்காய்ந்தவுடன்சுரசம்வாங்கு

சேரப்பாசுற்கண்டு கழஞ்சுரண்டு
திறமாகப்பொடித்திடுமுன்னீரிற்போட்டு
கோரப்பாநாளேந்திப்படியேசெய்து
குறையாமலிருநோங்குடித்திடாயே 95

வற்காமாலைக்குமருந்து.

பாரடாகீழ்க்காநெல்லிசமூலம்
பாங்கானமணித்தக்காலிசமூலம்
சேரடாஅரைத்துயெலுமிச்சங்காய்போற்
றிரட்டியேவுண்டைசெய்து பூசைபண்ணி
நேரடாநாள்மூன்றுவற்காமாலை
நில்லாதுநில்லாதுமுறைபொய்யாது
தேரடாபத்தியந்தானென்றுமில்லை
செப்புகியேனுவினெய்யன்னமுண்ணே. 96

நீர்க்காமாலைக்குமருந்து.

ஊணப்பாசிறுசிரைபொன்னுங்காணி
ஓகோஓகோநீர்ப்பூலாவேர்சீந்திற்கண்டு
நிண்ணப்பாவகையிலொருபலமேதூக்கி
நிரைப்பலங்கால்மிளகுவசம்போடுள்ளி
சண்ணப்பாயாவினெய்யீராழாக்கோடே
தாக்கியடுப்போற்றியெரித்திறுத்துக்கொண்டு
எண்ணப்பாவிருபொழுதும்பலமொன்றுண்ண
யிழியும்வற்காவாலையிதுதப்பாதே. 97

தப்பாதுகண்பருத்துகைகாலோய்ந்து
தண்ணீர்வாய்மிகவூரும்நீர்க்காமாலை
அப்பாகையாந்தகரைமிளகுமஞ்சள்
ஆனைசெருப்படைதான்சமனுயாட்டி
மெய்ப்பானயெலுமிச்சங்காய்போற்கொண்டு
வெள்ளாட்டுநீருங்காற்படியோடூட்டி
ஒப்பாகநாள்மூன்றில்வயிற்பேதிக்கும்
ஒழியுநீர்க்காமாலைமோருங்கூட்டே. 98

சோகையீளைக்குமருந்தெண்ணெய்.

கூட்டப்பாசெருப்படைச்சாறீராழாக்கு
குளங்கையாந்தகரைச்சாறீராழாக்கு

மூட்டப்பாமிளகுவசம்புள்ளிதட்டி
மூன்றுக்கும்வகைக்குயரைப்பலமேபோட்டு
மாட்டப்பாஆமணக்கெண்ணெயீராழி
மாறுமலெரித்திறுத்துபலமோரெட்டு
ஊட்டப்பாதினமேழுவயிற்பேதிக்கும்
ஓழியுநீர்க்காமாலை தாக்குதாக்கே. 99

வெள்ளோக்காளத்துக்கவிழ்தம்.

தாக்குநீர்முள்ளிவிரைப்பலமோரண்டு
தனியவறுத்திடிப்பொடிசெய்பதினைந்துக்கு
தூக்குநீகளிப்பாக்குகடுக்காய்மஞ்சள்
தொந்தித்திவகைநாலுவிராகனெட்டு
நோக்குநீயரப்பொடியின்விராகனைந்து
நுண்மையாய்க்கூட்டியரைதுண்டைமூன்று
நோக்குநீநாள்மூன்றுதினமேகொண்டாற்
சோகையீளைமூப்புமாகக்கேளே. 100

கேளடாவில்வக்காய்தண்ணீர்குத்தி
கெடியானகல்லிலுரைசுண்டைக்காய்போல்
தாளடாயிளவெந்நீரரையாழாக்கில்
தாக்கிந்தடிபமூன்றுநாளுண்டாக்கால்
நீளடாதொந்தமுள்ளவெள்ளோக்காளம்
நீங்குமேயிம்முறைதப்பாதுநீலி
தூளடாசீலையில்வைத்திரிபோற்செய்து
சுட்டுபூவாசனைமாசிக்காட்டே. 101

காட்டடாயெலிமிச்சம்பழச்சாற்தன்னில்
கண்டங்கத்திரியடிவேர்கழஞ்சரண்டு
ஆட்டடாமயனம்போலாகும்பாரு
அப்படியிப்படிநாள்மூன்றேயீய்ந்து
ஓட்டடாவெள்ளோக்காளந்தானீங்கும்
ஓகோகோ அரிசிபொரிமாவில்தேனை
யூட்டடாமத்தித்துநாவிற்பூசி
யுள்ளுக்கொள்வெள்ளோக்காளம்பாரே. 102

அந்திரவாய்வுக்குமருந்து.

பாருநீமுடக்கொத்தான்பலமோமொன்று
பாங்கானவுள்ளிபருப்பலமோவொன்று
சேருவெள்ளாட்டின்பலமாழாக்கெட்டு
சிறுகத்திமூட்டிபுழக்காகக்காய்ச்சி
நேருமிதுகடைந்திப்படிநாழ்மூன்று
நித்தமொருபொழுதுண்ண திறமாய்வாய்வு
தீருமிதுதப்பாதுமுறைபொய்யாது
சேராதேபுளிபுகையோடுப்புகேளே. 103

இரத்தபித்தவூஷ்ணத்துக்கவிழ்தம்.

கேளப்பாயிரத்தபித்த மூஷ்ணரோகங்
கெடியாகத்தீருதற்குவகையைப்பாரு
வாளப்பாசந்தனமோடேலஞ்சுக்கு
விளாகூவிளம்வேர்சமனாய்க்கொண்டு
காளப்பாநறுக்கியதிற்றண்ணீர்வாரு
தவறாமலெட்டொன்றாய்க்காய்ச்சிவாங்கே
ஆளப்பாசீனியுடன் கலந்துகொண்டு
அப்பனேமூன்றுநாளருந்திடாயே. 104

அறிந்திடவேயிருநாலுநேரங்கொள்ள
அமருமடாயிரத்தபித்தமகன்றுபோகும்
தெரிந்திடவேவகைமுறையாய்ச்சொன்னேன்மக்காள்
தேவிபதம்பூசித்து தினந்தோறுந்தான்
பரிந்திடவேபத்தியந்தானென்றுமில்லை
பகர்ந்தபழம்புளியுப்புவறுத்துக்கொள்ளு
கருந்திடவே திரோதாயி மயக்கந்தள்ளி
கைம்முறையாய்க்கொண்டிடவேகழன்றுபோகும். 105

ஈளைசுவாசகாசமிருமலிளைப்புமூர்ச்சைக்குமருந்து
வேறு.

போமடாயீளைமுதற்சுவாசகாசம்
பொற்றிருமல்சேத்துமங்களிளைப்புமூர்ச்சை
ஆமடாதொடைநொச்சில்வாதம்போக்கி
அப்பனேசெம்முள்ளிகடையின்பூரல்

காமடாது துவளைக்கண்டங்கத்திரி
கானகத்தினருந் துளசிமுருங்கையீண்டு
ஓமடாசிலம்பட்டையப்பைகோவை
யுறவிடித்துத்தண்ணீரிற்பிட்டுவையே. 106

வயிற்றுவலிஅஷ்டகுன்மத்திற்கவிழ்தம்.

வையப்பாபிட்டவியிற் றண்ணீர்வாங்கி
வளமானபீங்கானுள்வைத்துக்கொண்டு
செய்யப்பாதிரிகடுகுஅரத்தையோமஞ்
சீரகமிரண்டுடனேகிராம்புபத்திரி
பொய்யப்பாசொல்லவில்லையக்கிராகாரம்
புகழ்நறுக்குமூலமடாகோஷ்டந்தேக்கு
ஐயப்பாபதின்மூறுஞ்சமனுய்ச்சேர்த்து
அப்பனே கருகாமல்வறுத்துவாங்கே. 107

வாங்கியேபொடிசெய்துவைத்துக்கொண்டு
வளமானமுன்னீரில்விராகன்போட்டு
தேங்கியேதேனதிலேவிட்டுக்கிண்டி
திரட்டிடாய்லேகியம்போலிருபோழ்துந்தான்
ஓங்கியேயிருமூன்றுநேரங்கொள்ள
ஓடுமடாயீளைசபமிருமல்போகும்
பாங்கியேபுளிபுகையுமிறைச்சிமட்சம்
பாராதேபெண்மயக்கந்தள்ளிப்போடே. 108

போடவேவயிற்றுவலியஷ்டகுன்மம்
போவதற்குயின்னமொருஅவிழ்தங்கேளு
அடவேயிஞ்சிரசம் படிதானென்று
அப்பனேபழச்சாறுங்கொம்புத்தேனுந்
தேடவேவரிக்குமட்டிப்பழமுஞ்சாறுஞ்
சேர்த்துவிடுவகைக்குக்காற் படியுமாக
நாடவேபாண்டத்தில் வைத்துமூடி
நலமாகப்பாகுபலமெரித்திடாயே. 109

எரித்திடாய்திரிகடுகுதிரிபலாதி
யெடுத்திட்டசிவதைவேர்தகரமோமம்
பரித்திடாய்செவ்வியந்திப்பிலியின்மூலம்
பகர்ந்திட்டகோஷ்டமடாமதுரம்பத்திரி

தரித்திடாய்விளங்கமுஞ்சித் திரையிமூலந்
 தருவானரோகணியுஞ்சரக்கோடெல்லாம்
தெரிந்திடாயொவ்வொன்றுவிராகநாலு
 சேர்த்திடும்இளவறுப்பாய்வறுத்துக்கொள்ளே. 110

கொள்ளடாவடிரெண்டு தூளைவாங்கி
 குமுறவேகாச்சியதோர்பாகிற்சேர்த்து
தள்ளடாலேகியம்போற்செய்துக்கொண்டு
 தவறாமல் கலசத்திலிட்டுமூடி
விள்ளடாகுருவைநெல்பாண்டத்திட்டு
 மெலிந்தநல்நெல்லிட்டுச்சீலைசெய்து
அள்ளடாவெள்ளாட்டுத்தொழுவில்வைத்து
 அப்பாலீரைந்துதினஞ் சென்றுவாங்கே. 111

வாங்குகொட்டைப்பாக்களவுதின்றாயானால்
 வயிற்றுவலிகுடல்வாய்வுவாங்கிப்போகும்
பாங்கொட்டையிம்மருந்தையாருஞ்சொல்லார்
 பரிவானயென்னூலில் விரித்துச்சொன்னேன்
தாங்கொட்டைபுளியுப்புந்தள்ளிப்போடு
 சாப்பிட்டாலஷ்டகுன்மந் தவறுண்டேபோம்
மாங்கொட்டைபுளியுடனே சாதங்கொள்ளு
 மற்றொன்றுமாகாது மறந்திடாயே. 112

மறந்திட்டகருவொன்று சொல்லக்கேளு
 மகத்தானவயிற்றுவலிகடுப்புகண்டால்
வறந்திட்டநெல்லிமுள்ளியபிணிமாங்கொட்டை
 மாதளையின்தோலுடனேகிராம்புபத்திரி
கறந்திட்டபுளியன்விரைத்தோலுங்கூட்டி
 கண்டையீருஞ்சாதிக்காய்த்தேத்தான்வித்து
பறந்திட்டவெங்காயமிதுவெல்லாந்தான்
 பாகமாய்ச்சமனெடுத்துஅரைத்திடாயே. 113

அரைத்திட்டமருந்துடனே யாவின்வெண்ணெ
 யப்பனேகண்டிடைக்குச்சமனாய்த்தூக்கி
விரைந்திட்டகுருபதத்தில் தொண்டுபண்ணு
 விள்ளாதேவொருவருடன் வீண்பாராதே
கரைந்திட்டயிம்மருந்தைகொண்டாயானாற்

கடுப்புடனேவயிற்றுளைவுகாணுந்தோடம்
திரைந்திட்டபுளியுடனேபுகைசேராமற்
சிறுபயறுங்கூட்டியுண்ணத்திறமதாமே. 114

திறமானயின்னமொருவவிழ்தங்கேளு
செப்புகிறேன்மருந்தொன்று சொல்லக்கேளு
வறமானபெருமரட்டையாயிலியப்பட்டை
வளமானமாவிலுங்குவசம்பிந்துப்பு
கறமானநன்னாரிகுடசப்பாலை
கடுகுடனேயாதண்டைகாந்தங்காயம்
மரமானஅதிவிடையங்கடுக்காய்ப்பூவுங்
காத்திடவேவெண்காரபாய்ச்சிடாயே 115

பாய்ச்சடாசமன்கொண்டுபொடியாய்ச்செய்து
பரிவானவிளக்கெண்ணெயதிலேவிட்டு
காச்சடாமெழுகுபதம் வடித்துக்கொண்டு
கணபதிக்குப்பூசைபண்ணிகருணைகூர்ந்து
வாச்சடாயிருமூன்றுநேரங்கொண்டால்
வயிற்றுவலிகுடல்பிரட்டுவாங்கிப்போகும்
போச்சடாயிம்முறையைச்செய்துபாரு
போக்கொன்றுந்தப்பாது புத்தியோர்க்கே. 116

காமாலை சோகைபாண்டுவிஷப்பாகங்கர்மரோகங்கட்கு கியாழம்.

புத்தியுடன்செய்வதற்குமுறையைக்கேளு
புகழானகாமாலைசோகைபாண்டு
வித்தியுடன்விஷபாகங்காமரோகம்
விபரமாய்த்தீருதற்குமருந்தைக்கேளு
கத்தியுடன்கேசரமாங்கருவாய்க்கண்டு
கருணையுடன்பச்சைலந்திவாரிக்கொண்டு
எத்தியுடனிழைத்துணியில்முடிந்துகூட்டி
யியலானபாண்டத்திலிட்டுக்கேளே. 117

கேளப்பாநீர்முள்ளிகண்டங்கத்திரி
கெடியர்னதூதுவளைசங்கம்வேராம்
தாளப்பாவெள்ளறுகுசங்கங்குப்பி
தனிகையான்முக்கொழுஞ்சிகோவைத்தண்டு

வாளப்பாசிறுபூளைகீழ்க்காய்நெல்லி
வகையானசாரணையின்யிடங்குநாரி
கேளப்பாசிறுகீரைபழையகிட்டம்
கெடியானநன்னாரி வேருங்கூட்டே. 118

கூட்டடாமூருவளித்தண்டமுக்குராவேர்
குணமானசுஞ்சிபடாகூறக்கேளு
மாட்டடாவொவ்வொன்றுபலமீரைந்து
வகையானதூணிநீர்கியாழம்போடடு
ஆட்டடாயெட்டொன்ருய்க்காய்ச்சிவாங்கி
யப்பனேமேல்மருந்துசொல்லக்கேளு
பூட்டடாமண்டூரங்காந்தம்ரண்டு
புநிதமாய்ச்செந்தூரம்போட்டிடாயே. 119

போட்டிடாய்பவளபற்பமூன்றுஞ்
சேருபுகழானகியாழத்தில்போட்டுக்கொள்ளு
மாட்டடாயீரைந்துநேரங்கொண்டால்
மகத்தானவிஷபாகப்பித்தபாண்டு
மூட்டடாசயகாசமீளைரோகம்
அப்பனேவுடலைவிட்டேகும்பாரு
மூட்டிடாயிம்மருந்தையடுத்துக்காரு
மூவைந்துநாள்வரையில் முறிந்துபோமே 120

வீக்கத்துக்குச்சார்பூசல்.

முறிந்துப்போந்துவாலையிடவீக்கம்போக
முறையானநீர்முள்ளிசங்கங்குப்பி
அறிந்துபோங்கருநொச்சிபுண்ணாக்கின்மூலம்
அப்பனேயமுக்கராசாறுங்கூட்டி
பரிந்துபோங்குக்குடத்தின்யவரைச்சாறும்
பண்பானவகையொன்றுபடிக்காலாக
தெரிந்துப்போமடுப்பேற்றி வற்றக்காய்ச்சி
நேராகப்பூசிடவே வாங்கிப்போமே. 121

பெரும்பாட்டுக்குச்சார்பூசல்

போமடாபெரும்பாண்டு வுதிரங்காணும்
போவதற்கு யின்னமொருவவிழ்தங்கேளு

ஆமடாஆல்கொழுந்து யெருக்கன்மொக்கு
அப்பனேபிரண்டையோடுமிளகுங்கூட
வாமடாயிலுப்பையுகிட்டஞ்சேரு
வகையானபழச்சாற்றாலரைத்துவாங்கி
சாமடாயடிவயிற்றிற்பூசிப்போடக்
கட்டுண்டேபோகுமெனக்காணலாமே. 122

மண்டைபீனிசத்துக்குநசியம்.

காணப்பாயின்னமொருவவிழ்தங்கேளு
கடியானபீனிசமண்டைக்குத்து
தோணப்பாகருநொச்சிபச்சைமஞ்சள்
துப்பானவெண்ணொச்சிசாறும்கூட்டி
வேணப்பாபடியரைக்கால் வீதங்கூட்டி
வெள்ளாட்டு நெய்படிகால்விட்டுக்காய்ச்சி
பூணப்பாநசியமிடப் பத்துநேரம்
புளிப்புகையிலையும்போக்கிடாயே. 123

பீனிசத்துக்குநசியம்.

போக்கடாபத்தியந்தா னென்றமாக
புகழான வெண்ணீருஞ்சாதங்கொள்ளு
தாக்கடாயிம்மருந்தை செய்துபாரு
